தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 15, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 ஆகஸ்ட் 31, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து."

மக்களுக்கு நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்ப நிலை, உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டுக்கு அழகு எனக் கூறப்படுபவைகளாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 121, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

121—

தங்கும் விடுதி

***544—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 31

சிவகங்கை அரசு பெண்கள் கல்லூரியில் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் தங்கும் விடுதி கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், சிவகங்கையில் அரசு பெண்கள் கலைக் கல்லூரியும், மன்னர் கலைக் கல்லூரி, இருபாலர் படிக்கிற கல்லூரியும் இருக்கிறது. அந்தக் கல்லூரிகளிலே சிவகங்கை, மானாமதுரை, இளையான்குடி, தேவகோட்டை, திருப்பத்தூர் போன்ற பகுதிகளிலிருந்தும், மாவட்டம் முழுவதிலிருந்தும், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்தும், மாணவ, மாணவியர்கள் அங்கே வந்து படிக்கிறார்கள். அவர்கள் ஏழை எளிய நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் என்ற அடிப்படையில், அவர்கள் தங்கிப் படிப்பதற்கும், தினந்தோறும் வந்து செல்வதற்கான பஸ் போக்குவரத்து சிரமமான பிரச்சினையாக இருப்பதாலும், விடுதிகள் என்பது அவசியம் தேவைப்படுகிறது. எனவே, அந்த அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோருக்கான கல்லூரி மாணவியர் விடுதியும், கல்லூரி மாணவர்களுக்கான ஆதிதிராவிடர் நல விடுதியும் அமைத்துத் தந்தால், அந்தப் பகுதியிலே இருக்கிற நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையில், நமது அரசு அந்த மாணவ, மாணவியர்களுக்கான தங்கும் விடுதிகளைக் கட்டிக்கொடுக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சிவகங்கையில் மகளிருக்கான இரண்டு தங்கும் விடுதிகள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதிலே மகளிர் கலைக் கல்லூரியைச் சேர்ந்த 91 ஆதிதிராவிட மாணவிகளும், 17 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர்களும் தங்கிப் படிக்கின்றார்கள். ஆகவே, அந்த வசதியே போதுமானதாகக் கருதப்படுகிறது. தேவை ஏற்படுமானால், அதற்கான வசதிகளை

2006 ஆகஸ்ட் 31]

ஆதிதிராவிட நலத் துறையின் மூலமாக விரிவுபடுத்துவதற்கான முயற்சிகளை மாண்புமிகு முதல்வர் அவர்களுடன் கலந்து ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே எங்களது மாவட்டத்திலிருந்து 120–க்கும் மேற்பட்ட மாணவியர்கள், ஆதிதிராவிட கல்லூரி மாணவியர்கள் விடுதியில் சேர்வதற்காக விண்ணப்பித்து அவர்களுக்கு இடம் கிடைக்காத நிலைமை உள்ளது. அவர்களை விடுதியில் சேர்க்க அனுமதி கேட்டு ஒரு செயற்குறிப்பை மாவட்ட ஆட்சித் தலைவர் அனுப்பியிருக்கிறார். அதைப்போல, அங்கே மாணவர்களுக்கு சீர் மரபினருக்கான ஒரு கல்லூரி விடுதி இருக்கிறது. அதிலும் கிட்டத்தட்ட 100 மனுக்கள் நிலுவையில் இருக்கிற சூழ்நிலையில், அதற்கும் கூடுதலாக இட ஒதுக்கீடு செய்வதற்கான அனுமதி வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு அமைச்சருக்கு கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையில் ஆண்டுக்காண்டு கல்லூரிகளிலே சேர்ந்தும், நூற்றுக்கணக்கான மாணவ மாணவியர்கள் இன்றைக்குத் தங்கிப் படிக்க முடியாத ஒரு சூழலில் பாதியிலே படிப்பை நிறுத்தவேண்டிய ஒரு சூழலுக்கும், மிகுந்த சிரமத்திற்கும் ஆளாகிறார்கள். வெளியிலே தங்கியிருக்கும்போது ஏற்படக்கூடிய பல்வேறு பிரச்சினைகள் மாணவ, மாணவியர்களுக்கும் பல துன்பங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், அவசியம் மாணவியர்களுக்கான பிற்படுத்தப்பட்டோர் நல விடுதியும், அதைப்போல மாணவர்களுக்கான ஆதிதிராவிடர் நல விடுதியும் தேவை என்ற அடிப்படையில், கருணைகூர்ந்து நமது முதல்வர் அவர்களால் சிவகங்கை நகரத்திலே இரண்டு விடுதிகளும் அமைத்துத் தரப்படுமா என தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரி விடுதிகளெல்லாம் ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாகத்தான் கட்டப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தம் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான நிதியும் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்களும் அதற்கான நிதி உதவியை அளித்து, பிற்படுத்தப்பட்டோர் நலத்

துறை அல்லது ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களோடும் பேசி, வருங்காலங்களிலே முதல்வர் அவர்களையும் கலந்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொள்ளலாம்.

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன்.

திரு. பி.என். பெரியண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், 8 ஒன்றியங்களை உள்ளடக்கிய மாவட்டம். தருமபுரியில் ஒரு கலைக் கல்லூரி உள்ளது. பெண்களுக்கென்று தனியாக ஒரு கலைக் கல்லூரி வழங்கினால் நன்றாக இருக்கும் என்ற எண்ணத்திலே, அதைச் செய்து தர முடியுமா என்று தலைவர் அவர்களுடைய வாயிலாக அமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது அங்கே இருக்கிற கல்லூரி, இரு பாலரும் சேர்ந்து படிக்கிற கல்லூரியாகத்தான் இருக்கிறது. ஆகவே, மகளிருக்கென்று தனியாக கல்லூரியை இப்பொழுது தொடங்குகின்ற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி.

திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கல்லூரி விடுதிகளில் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கு அரசு இந்த ஆண்டு முன்வருமா? பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோருடைய விடுதிகள் அந்தந்தத் துறை சார்பாகச் செய்து தருகின்றது. அரசு சார்பாக கல்லூரிகள் இருக்கக்கூடிய இடங்களில் உள்ள விடுதிகளில் கூடுதலாக இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்படுமா என்பதையும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், அதேபோல, ஆதிதிராவிடர் நலத் துறை நடத்துகிற விடுதிகளும் அரசு சார்பிலே நடத்தப்படுகிற

2006 ஆகஸ்ட் 31]

விடுதிகள்தான். ஆகவே, அந்தத் துறையிலே இதுபற்றிய கேள்விகளைக் கேட்க வேண்டும். அதற்கான வசதிகளையோ, விரிவுபடுத்துவது பற்றியோ, அந்தத் துறையிலேதான் முடிவு எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்துரை.

திரு. பா. வேல்துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கல்லூரியினுடைய விடுதிக்காக இருந்தாலும்கூட, அமைச்சர் அவர்கள் மாநிலம் முழுவதும் உள்ள எல்லா விவரங்களையும் வைத்திருப்பதால், இந்தக் கேள்வியைக் கேட்கிறேன். என்னுடைய சேரன்மகாதேவி தொகுதியிலே, மனோ கல்லூரி என்ற ஒரு கல்லூரி இருக்கிறது. அந்தக் கல்லூரி மக்கள் மத்தியில் பெரிய வரவேற்பைப் பெறவில்லை. அந்தக் கல்லூரியிலே மாணவர்கள் அதிகமாக, ஈடுபாட்டோடு சேர்வதில்லை. எனவே, அந்தக் கல்லூரியை அரசு கலைக் கல்லூரியாக மாற்றி, சேரன்மகாதேவி தொகுதிக்கு ஒரு கல்லூரியை அமைச்சர் அவர்கள் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த விவரத்தை என்னிடம் கொடுப்பார்கள் என்று சொன்னால், முதல்வர் அவர்களோடு கலந்து, அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 122, திரு. சு. சிவராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

122—

பணிமனை

***764—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் வட்டம், சங்கராபுரம் நகரத்தில் அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS